

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## துன்பத்தில் 'கூனி குறுகச் செய்யும்' கட்டிலிருந்து விடுதலை!

**து**ன்பம், வியாகுலம், நிந்தை, அவமானம்..... போன்ற நேரங்களில் எந்த உத்தம சீஷனும் விழித்திருக்க வேண்டும்! அசதியாயிராமல் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்! ஏனெனில் இதுபோன்ற நேரங்கள் அல்லது சம்பவங்கள் மூலமாக ''பெலவீனப்படுத்தும் ஆவி'' நமது மனதை அல்லது ஆத்துமாவை.... நொந்து, தள்ளாடி, ஒடுங்கிப்போகச் செய்துவிடும். அச்சத்தால் ஆட்கொள்ளப்பட்டு ''இனி எவ்வளவும் நிமிரக் கூடாதபடி கூனச் செய்துவிடும்'' என இயேசு தெரிவித்தார் (லூக்கா.13:11).

இது, உங்கள் ஆத்துமாவிற்கு ஏற்பட்ட கொடிய நிலை! உங்களுக்கு எவ்வளவு பணம் இருந்தாலும், படிப்பு மற்றும் பதவி இருந்தாலும்... இந்த 'கூனிகுறுகச் செய்யும்' அவல நிலையை அகற்ற முடியாது! நமது ஆத்துமாவில் அல்லது நம் மனதில் விழுந்த கூனை ''நிமிரச் செய்து'' விடுதலை தருவதற்கு இயேசு மாத்திரமே வல்லமை கொண்டிருக்கிறார்! (வசனம்.13). இனியும், தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாகிய நாம்.... நம் ஆத்துமாவை 'கூனவைக்கத்' துடிக்கும் சாத்தானின் கட்டுகளுக்கு உட்படத் தேவையில்லை! ஏனென்றால், எந்த கட்டுகளையும் அவிழ்த்திட வல்லமை கொண்ட இரட்சகரை நாம் இன்று புதிய உடன்படிக்கையில் பெற்றிருக்கிறோம்! (வசனம்.16).

*-tr*

பெட்டகம் 19 | மார்ச் 2017 | பரல்கள் 3



## சுயமான பிரயாசம் வீண்! கர்த்தரால் கிடைப்பதே பலன்!

யோகா பயிற்சி போன்ற 'தன் சுய – முயற்சியால்' எதையும் சாதிக்கலாம்! என இந்த உலகத்தின் அதிபதி அனேகரை வஞ்சனை செய்கிறான். ஆனால் சத்திய வேதமோ "சரீர முயற்சி அற்ப பிரயோஜனம்" என அதை மறுக்கிறது! தேவ பக்தியிலிருந்து புறப்படும் ஊற்றே ஜீவனும்..... இம்மைக்கும் மறுமைக்கும் பிரயோஜனமுள்ளது! என அரிதியிட்டு கூறுகிறது (1தீமோ.4:8).

அதுபோலவே, நாமாக திட்டமிட்டு, நம் சுய பெலனை நம்பி பிரயாசப்படும் அனைத்தும் 'விருதா' என்றும் 127 – ம் சங்கீதம் போதிக்கிறது. 'கர்த்தரே' எதையும் முன்னின்று துவங்க வேண்டும்! அவரே ஒன்றை கட்டுவதற்கு முன் செல்லாமல், நம் பிரயாசங்கள் எத்தனை கடினமாய் இருந்தாலும் அது விருதா! கர்த்தர் முன் நிற்காமல், கர்த்தர் செயல்படாமல், நாமாகவே எடுக்கும் கடும் முயற்சிகளை.... அதிகாலமே முயன்று, தாமதமாய் (நேரப்பட–Late) படுக்கை செல்லும் பிரயாசங்களுக்கு ஒப்பிட்டு 'அதை விருதா' என்றே வேதம் எச்சரிக்கிறது.

தேவனுக்கும், தேவ பக்திக்கும் முதலிடம் கொடுத்து, அதிகாலையில் தேவனுடைய கிருபையை நாடி, அவரது சித்தம் என்ன? என்பதை தேடுவோரே, அவருக்கு பிரியமானவர்கள் என்றும், அவர்களே தங்கள் சுய பிரயாசங்களிலிருந்து ஓய்ந்து "நித்திரையான" இளைப்பாறுதலை கண்டடைந்திட தேவன் உதவுகிறார்! என்ற இரகசியத்தையே இவ்வசனங்களில் காண்கிறோம்! 'இந்த இளைப்பாறுதல்' ஒன்றே, நம் பிரயாசங்களிலிருந்து நாம் ஓய்வதும், தேவனே கட்டுவதும், காப்பதும் .... ஆகிய, அவரால் கிடைக்கும் பலனைப் பெறுவார்கள், என 127–ம் சங்கீதம், புதிய உடன்படிக்கையில் வாழும் நம் யாவருக்கும் உத்திரவாதம் அளிக்கிறது!!

*-Ed*

### சந்தா புதுப்பிக்க வேண்டுகோள்!

2017 'பரலோக பொக்கிஷங்கள்' வருட சந்தா ரூ.120/– M.O. செய்து அல்லது ஆன்லைன் மூலம் புதுப்பித்துக் கொண்ட அனைவருக்கும் நன்றி. புதுப்பிக்காதவர்கள் மார்ச் 15 தேதிக்குள் புதுப்பிக்க வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.100/– அயல்நாடு ஒரு பிரதி ரூ.700/– அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும். புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**Savings a/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## அழைப்பு இல்லாத ஊழியமா? அது அபாயம்!

**அ**வர் கலிலேயா கடலோரமாய் நடந்து போகையில் கடலில் வலை போட்டு கொண்டிருக்கிற சீமோனையும், அந்திரேயாவையும் கண்டார். இயேசு அவர்களை நோக்கி: "என் பின்னே வாருங்கள் உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்" (மாற்கு.1:16,17). அந்த கலிலேயா கடற்கரை ஓரத்தில் நூற்றுக்கணக்கான மீனவர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரையும் இயேசு அழைக்கவில்லை! பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் ஆகிய நான்கு பேரை மாத்திரமே அழைத்தார். நாம் எல்லோருமே கிறிஸ்துவின் சாட்சிகளாய் விளங்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஆனால், ஆண்டவருக்கு முழு நேர ஊழியமாய் வந்திட, ஒருவன் தேவனால் 'பிரத்தியேகமாய் குறிப்பிட்டு' அழைக்கப்பட்டிருக்க வேண்டும். நான் ஒரு சுவிசேஷகனாக விரும்புகிறேன்! அல்லது, ஒரு போதகனாக விரும்புகிறேன்! என நீங்களாகவே சொல்லிக் கொள்ள இயலாது. அந்த ஊழியத்திற்கு தேவன் உங்களை அழைத்து அதற்கென உங்களை ஆயத்தப்படுத்தியிருக்க வேண்டும்.

தேவன் தன்னுடைய சர்வ ஆளுகையில், இன்றும் தன்னுடைய ஊழியர்களை அழைக்கிறார். ஒரு மானிட சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பும் முக்கியமானது போலவே, கிறிஸ்துவின் சரீரத்திலும் ஒவ்வொரு ஊழியமும் முக்கியமானதாகும்! முகம், கைகள் போன்ற சில உறுப்புகள் வெளித்தோற்றத்தில் காணப்படமுடியும்! ஆனால் சிறுநீரகம், ஈரல் போன்ற உறுப்புகள் வெளித்தோற்றமாய் காணப்படுவதில்லையே! இதுபோலவே கிறிஸ்துவின் சரீரத்திலும், சில ஊழியங்கள் மறைவானதாகவும், சில ஊழியங்கள் வெளித் தோற்றமாயும் காணப்பட முடியும்.

மத்தேயு.11:29 - ல், "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என இயேசு கூறினார். ஆனால், மாற்கு 1:16,17 - ல் "என்னை பின்பற்றி வாருங்கள்" என அழைத்தார். இந்த இரு காரியங்களையும், ஒரு சீஷன் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது, ஒரு சீஷன் கற்று கொள்பவனாயும், பின்பற்றுகிறவனாயும் இருக்க வேண்டும். ஆம், தன் ஜீவ காலமெல்லாம் இயேசுவிடமிருந்து கற்றுக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும். ஒரு இராணுவத்தில் உள்ளவன் "லெப்ட், ரைட்,

*லெப்ட், ரைட்" எனக் கூறி சீர் நடை நடப்பது போல், நாமும் "கற்றிடு, பின்பற்றிடு, கற்றிடு, பின்பற்றிடு" எனக் கூறி, கிறிஸ்து திரும்ப வரும் வரைக்கும் வீறுகொண்டு நடந்திட வேண்டும்!*

*நீங்கள்* **கற்றுக்கொண்டு** *மாத்திரம் இருந்துவிட்டு,* **பின்பற்றி** *நடக்க வில்லையென்றால், இராணுவத்திலுள்ள ஒரு வீரன் தன் இடது காலை மாத்திரம் கட்டளைக்கு முன்வைத்து "லெப்ட், லெப்ட், லெப்ட், லெப்ட்" என நடக்கிறவனாய் இருப்பான். ஆனால் இயேசுவின் உண்மையான சீஷனோ, கற்றுக்கொண்டு, அதை கடை பிடிக்கிறவனாய் இருப்பான். நீங்கள் கற்றுக்கொண்டதை கடைபிடிக்கவில்லையென்றால் உங்களைப் போலவே "ஒற்றை காலில்" நடக்கும் மக்களைத்தான் உருவாக்கிட முடியும். நாம் போதுமான அளவு கற்றுகொண்டோம் என ஒருபோதும் சொல்லிட இயலாது. நம் ஜீவியத்தின் முடிவு நாள் வரையும், நாம் இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.*

*இந்த வசனத்தின் அடுத்த பகுதி ஒரு வாக்குத்தத்தம்! "நீங்கள் என்னை பின்பற்றினால்..... உங்களை ஆக்குவேன் அல்லது மாற்றுவேன்" இவ்வாறு* **"உங்களை உருவாக்குவேன்"** *என்ற வார்த்தையை சற்று தியானியுங்கள். இது, ஒரு குயவன் ஒரு பாத்திரத்தை வனைவது போல் உள்ளது!*

> ஒரு குயவன், எல்லா பாத்திரங்களையும் ஒரே வடிவத்தில் வனைவதில்லை. தேவனும் அவ்வாறே, நம்மை வெவ்வேறு வடிவங்களில் வனைகிறார். ஆகவே, உங்கள் ஊழியத்தில், மற்றொரு சகோரனுடைய ஊழிய வடிவத்தை ஒருபோதும் நாடாதிருங்கள். அப்படி செய்தால், தேவன் உங்களை வைத்து வனையும் வடிவத்தை சீர்குலைப்பீர்கள்!

*எங்கள் சபையில் "என்னுடைய ஊழியத்தை அச்சாக வைத்திட ஒருபோதும் முயற்சிக்காதீர்கள். ஏனெனில், நீங்கள் 'தனித்தன்மையாய்' இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார். நீங்கள் நீங்களாகவே இருந்திட விரும்புகிறார்!" என ஜனங்களிடம் அடிக்கடி கூறியிருக்கிறேன். தேவன் தம்முடைய சபையில் என்னைப் போன்ற ஒருவனை மாத்திரமே விரும்புகிறார்! அதுபோலவே, உங்களைப் போன்ற ஒருவரையே தேவன் விரும்புகிறார்!*

**நீங்கள் ஆண்டவரைப் பின்பற்றி நடந்தால்,** *நீங்கள் யாராய் இருக்க வேண்டுமோ அவ்வாறாகவே உங்களை உருவாக்குவார்! அது ஆண்டவரைச் சார்ந்த பொறுப்பு! இந்த இரண்டு 'சீமோன், அந்திரேயா' புருஷர்களின் விஷயத்தில், அவர்கள் மனுஷரைப் பிடிக்கிறவர்களாய் வனையப்பட வேண்டும்! உங்கள் விஷயத்தில் அது*

வேறுவிதமாய்.... **சபையில் ஓர் உதவியாளராய் கொண்ட ஊழியமாய்** இருக்கக் கூடும்! சிலர் அப்போஸ்தலராகவும், சிலர் தீர்க்க தரிசிகளாகவும், இன்னும் சிலர் சுவிசேஷகர்களாகவும் இருக்கிறார்கள். சுவிசேஷகர்களே, மனுஷரைப் பிடிக்கிறவர்கள்! இன்னும் சிலர், பவுலைப்போல **எல்லா ஊழியங்களையும் கொண்ட** அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, போதகன், மேய்ப்பன் மற்றும் சுவிசேஷகனாய் விளங்குகிறார்கள். இருப்பினும், ஒரே நபருக்கு இந்த எல்லா விசேஷித்த வரங்களையும் தேவன் வழங்குவது அபூர்வமானதே ஆகும். நம்மில் அநேகர், வழக்கமாய் "ஒரே ஒரு வரம்" மாத்திரமே பெற்றிருக்கிறோம். ஆதி நாட்களில் வரங்களைப் பெற்ற ஜனங்கள் சபையில் சொற்பமாய் இருந்தபடியால், அப்போஸ்தலர்களே அநேக வரங்களைப் பெற்று ஊழியம் செய்ய வேண்டியதாய் இருந்தது. ஆனால் சபை விருத்தி அடைந்த காலத்தில், தேவன் வரங்களைப் பரவலாய் பிரித்துக் கொடுக்கிறார். ஆகிலும், உங்கள் வரம் எதுவாயிருந்தாலும், அதன் ஆதாரமாய் இருக்க வேண்டியதெல்லாம் "**உங்களை உருவாக்குவேன்**" என்பதுதான். அவர் நம்மை என்னவாய் மாற்ற விரும்புகிறாரோ அவ்வாறு மாற்றிட ஆண்டவரிடத்தில் நம்மை விட்டுக் கொடுக்க வேண்டும்! ஏனெனில், நம்மை நாமே ஒருபோதும் உருவாக்கிட முடியாது!

நீங்களாகவே உங்களை, ஒரு சுவிசேஷகனாக அல்லது ஒரு போதகனாக அல்லது ஒரு அப்போஸ்தலனாக மாற்றிக் கொள்ள முயற்சிக்காதீர்கள். அப்படி செய்தால் நீங்கள் முழு தோல்வி அடைவீர்கள்! தேவன் உங்களை அழைக்காத எந்த ஊழியத்தையும் செய்வதற்கு ஒருக்காலும் முயற்சி செய்யாதீர்கள். உங்களை தாழ்த்தி கர்த்தருக்கு காத்திருங்கள்..... உங்களை எதற்காக அழைத்திருக்கிறார் என்பதை அவரே காண்பிக்கட்டும்.

நம் தேசத்தில், தங்களுக்காகவே ஒரு ஊழியத்தை வைத்துக்கொள்ள ஏராளமான ஜனங்கள் முயற்சி செய்ததை நான் கண்டிருக்கிறேன். அமெரிக்காவிலிருந்து அல்லது வேறு ஒரு மூலதனத்திலிருந்து அவர்கள் பணம் பெற்று, ஒரு ஊழியத்தை துவங்குகிறார்கள். ஆனால் ஒரு நாளில், அவைகளை தேவன் வேரோடு அசைத்து அழித்துவிடுகிறார்!

உங்களுக்கு ஒரே ஒரு வாழ்க்கைதான் உண்டு என்பதை மறந்து விடாதீர்கள். **உங்களுக்கு பெரிய ஊழியம் இருப்பதைபோல் ஜனங்களை கவர்ச்சிக்க முயன்று,** உங்கள் ஜீவியத்தையும் உங்கள் ஒரே வாழ்க்கையையும் வீணாக்கிப் போடாதிருங்கள். கிறிஸ்துவின் சரீரத்தில் நிறைவேற்றும்படி, தேவன் அழைத்த ஊழியத்தை மாத்திரம் நிறைவேற்றுங்கள்! "**நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை** நிறைவேற்றும்

*படி கவனமாயிருப்பாயாக" என்றே வேதம் நமக்கு கூறுகிறது (கொலோசெயர்.4:17). கர்த்தருக்கே காத்திருங்கள்! அப்போது மாத்திரமே அவர் விரும்புகிற விதமான பாத்திரமாய் உங்களை உருவாக்குவார். ஒரு குறிப்பிட்ட ஊழியத்திற்கு, எல்லோரையும் அவர் அழைப்பதில்லை! கலிலேயா கடலோரத்திலிருந்த எல்லா மீனவர்களும் 'இயேசுவின் சீஷர்களாய்' மாற முடியும். ஆனால், அவர்கள் எல்லாரும் அப்போஸ்தலர்களாய் மாற முடியாது. அப்போஸ்தலர்கள், பிரத்தியேகமாய் அழைக்கப்பட வேண்டும். நம் ஜீவியத்திற்காக அழைக்கப்படுவதற்கும், நம் ஊழியத்திற்காக அழைக்கப்படுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நாம் அறிந்திருக்க வேண்டும். ஆகவே, நீங்கள் வைத்திருக்கும் ஊழியத்தை மற்றவர்களும் பெற்றிருக்கும்படி நீங்களும் ஜனங்களை கட்டாயப் படுத்தாதீர்கள்! அது, மதியீனம்.*

*ஆகவே, அழைப்பு இல்லாதவர்களை கட்டாயப்படுத்தி, ஊழியத்திற்கு வைத்துக்கொள்ளலாம் என நினைப்பது மதியீனம்! அதுபோலவே, அழைப்பு இல்லாமல், சுய லாபத்திற்காகவோ அல்லது 'ஜனங்களை கவர்ச்சிப்பதற்காகவோ' ஒருவர் செய்திடும் ஊழியமும் மதியீனம்! எஜமான் கட்டளையிட்டதற்கு "அடியேன் கேட்கிறேன்" என அழைப்பு பெற்றவனே சர்வ வல்ல ஆண்டவரின் உத்தம ஊழியனாய் திகழ்ந்திட முடியும்!*

*– சகரியா பூணன்*

---

## பெருமையா? ஜாக்கிரதை, சீக்கிரம் விழித்துக்கொள்ளுங்கள்!

*இந்த பூமியில் நமக்கு எச்சரிக்கை செய்யப்படுவது 'பாவம்' போலவே அதற்கு சமமாய் 'பெருமை' இருக்கிறது! 'பாவம்' இரத்தாம்பர சிவப்பாய் இருக்கிறது.... 'பெருமையோ' ஓர் கவர்ச்சியான பளபளப்பாய் தோன்றுகிறது! இன்றைய திரளான கிறிஸ்தவர்கள் **'இரத்தாம்பர சிவப்பான' பாவத்தை** ஜெயித்தோம் என எண்ணிக்கொண்டு **'பளபளப்பான' பெருமையின்** கேட்டில் விழுகிறார்கள்! இவ்வாறாக, அனேகர் பெருமையின் பயங்கரத்தைச் சிறிதும் உணராமலே இருக்கிறார்கள்! மதுகுடிப்பது பாவம்தான்... ஆகிலும், இக்குடிகாரனை எதிர்த்துநிற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தேவன் இல்லை என்பதை அறிவீர்களா? ஏனெனில் இக்குடிகாரன் ஒருநாள் தன் அவலநிலையை ஒத்துக்கொண்டு, தேவனிடத்தில் திரும்பிவிடக் கூடும்! இருப்பினும், இன்று அனேக ஜனங்கள் ஓர் பெருமையுள்ளவனைக் காட்டிலும் ஓர் குடிகாரனைத்தானே மோசமானவன் என எண்ணுகிறார்கள்?*

**ஆனால், தேவனைப் பொறுத்தமட்டில், ஒருவன் தன்னைத்தான் உயர்வாக எண்ணுகிற பாவம், குடிகாரனுக்கு சமமான மோசமான பாவமேயாகும்!**

*நம்மைக்குறித்த மேன்மையான பெருமையின் எண்ணங்களை நம்மில் ஊதி உப்பச்செய்வதற்கு என்னென்ன உபாயம் உண்டோ அவை அத்தனையையும் கொண்டு சாத்தான் முயற்சிப்பான். இவ்விதமாய் ஒருவன் பெருமையின் அகங்காரத்திற்குள்ளாகிவிட்டால்.... அந்தோ! அவன் அடங்காத காட்டுக்கழுதையைப் போலவே ஆகிவிடுகின்றான்!!*

*இளமை அனுபவத்திலுள்ளோர்க்கு ஓர் குறிப்பிட்ட அபாயம் உண்டு. அது யாதெனில், தேவன் தங்களுக்கு சபையில்* **"விசேஷித்த வெளிச்சம்" கொடுத்திருக்கிறார்** *என அவர்கள் எண்ணுவதுதான். 'இந்த எண்ணம்' அவர்களை எளிதில் உப்பச்செய்துவிடும்! விசேஷ வெளிச்சத்தைத் தாங்கிக்கொள்ளமுடியாத இவ்வித இளமை சகோதரர்களுக்கு, தேவன் விசேஷ வெளிச்சத்தைக் கொடுப்பாரோ? நிச்சயம் இல்லை! அப்படி அவர் கொடுப்பாரென்றால், அது அவர்களை அழித்துவிடுமே!? உண்மை என்னவென்றால், இன்று எண்ணற்ற ஜனங்கள் தங்கள் வாழ்வில்* **'தாழ்மை' என்ற வெளிச்சத்தைத்தான் பெறவில்லை!** *தாழ்மை, பெருமை, ஆகிய இந்த இரண்டு பிரமாணங்களைக் கொண்டுதான் ஒரு மனுஷனுடைய வாழ்க்கையில் எந்த நிகழ்ச்சியும் சம்பவிக்கிறது. தன்னைத்தானே மனமுவந்து தாழ்த்தும் ஒருவனே நிச்சயமாய் உயர்த்தப்படுவான். தெளிந்த புத்தியுள்ள யாராயிருந்தாலும், "மனுஷனாகிய ஒருவன் தன்னைக்குறித்து மேன்மையாக எண்ணுவது தேவனுடைய பார்வையில் மகா அருவருப்பாயிருக்கிறது" என்ற உண்மையை கண்டுகொள்வான்!*

**தன் சொந்தநிலையை உணர்ந்து ஒத்துக்கொள்ளாத அகங்காரம் நிறைந்த ஓர் மனுஷனை, தேவனால் எப்படி ஆசீர்வதிக்க முடியும்? இதுபோன்ற இறுமாப்பான மனுஷனை தேவனால் ஆசீர்வதிக்க முடியாது என்பது ஜீவப் பிரமாணத்தின் மாறாத விதியாகும்!**

*"தாழ்மை" என்ற இந்த பொன்னான பிரமாணம் உங்கள் வாழ்வில் உயர்வாய் காணப்படாவிட்டால், நீங்கள் எப்போதும் ஆத்துமத்திற்குரிய* **மனுஷீக குணாதியத்தோடே** *தேங்கி தங்கி விடுவீர்கள். இன்று எல்லோரும் அறிந்திருக்கிறபடி "தாழ்மையாய் இருப்பது நல்லதுதான்!" என்ற பொது அறிவு உங்களுக்கு கைகொடுக்காது!* **"தாழ்மையே என் வாழ்வில் உயிர் மூச்சு"** *என்ற உணர்வே சரியானதாகும். தாழ்மையில்லாமல் வெளிச்சத்தின் வாசலுக்குகூட ஒருவன் வர*

*முடியாது! வெளிச்சத்தை இழந்த இவர்கள், வேதப்புத்தகத்தின் மீது துடிப்பான வாஞ்சையை இழந்திருக்கிறார்கள்!! "நான் எல்லாவற்றையும் நன்றாகத்தான் செய்கிறேன். . . என்னில் தவறு என காண்பதற்கு ஒன்றுமேயில்லை" என நீங்கள் எண்ணினால், இதைவிட பெருத்த அபாயம் வேறெதுவுமேயில்லை எனலாம்.*

**உங்களை நியாயந்தீர்க்காமல், பிறரை நியாயந்தீர்ப்பதற்கே துளாவிக் கொண்டிருக்கும் நீங்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அவபக்தியானவர்கள்!**

*"பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்!" என யாக்கோபு **4:6** கூறுவதை நீங்கள், கேட்டவுடன் "நான் ஒன்றும் பெருமையாய் இல்லை" என சிந்திக்கத் துவங்கலாம். ஆனால் உங்களிடம்* **தேவனுடைய கிருபை** *காணப்படவில்லையே! அப்படியானால் என்ன? நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், நீங்கள் பெருமையுடையவர்கள்தான். ஏனெனில், தேவன் தாழ்மை யுள்ளவர்களுக்கு கிருபையை தந்துகொண்டே இருக்கிறார். நீங்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்பதற்கு முதல் அடையாளம், நீங்கள் பிறரை குறைகூறி நியாந்தீர்ப்பதற்குப் பதிலாக* **உங்களைக் குறித்த உண்மை நிலையை அறிந்தவர்களாய்** *மனங்கசந்து தேவனுக்கு முன்பாக நின்றிருப்பீர்கள்!*

*ஒரு மனுஷனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியின்மையை வைத்தே இவன் எல்லோரையும் போலவே 'அகந்தை கொண்டவன்' என எளிதில் கண்டுவிட முடியும்! இன்று அதிகபட்சமான ஜனங்கள் தாழ்மையாக இருப்பதேயில்லை. இறுமாப்பான சம்பாஷணை! பிறரை சிறுமைப்படுத்தும் சம்பாஷணை! தன்னை உயர்த்தி, பிறரை அசட்டை செய்யும் மனப்போங்கு! மனம் புண்படும் ஆத்திரங்கள்! நேர்மையற்ற தந்திரங்கள்! இதுதவிர.... அவர்களின் பாவங்கள், ஆகிய அனைத்திற்கும்* **"பெருமை என்ற வேர்"** *பொருந்தும்! இவை அனைத்தையும் செய்துவிட்டு, ஒருவரிடமும் இவர்கள்* **மன்னிப்புகூட கேட்பதில்லை** *என்பது அவர்களின் பொதுவான இரட்சிப்பிற்கு ஏற்பட்ட அபாயம்! ஆனால் தேவனோ, நம்மில் வெளிப்படும் தாழ்மையைக் கொண்டுதான் நம் உள்ளான மனுஷனில் மறுரூபத்தைக் கொண்டுவர விரும்புகிறார்.*

*எந்த நிலையிலும் 'என்னைத் தாழ்த்த' வேண்டுமே! தேவனிடமிருந்து 'கிருபையைப் பெற' வேண்டுமே! என்ற தேவனுக்குரியவைகளால் இவர்கள் ஆட்கொள்ளப்படுவதேயில்லை! இதனிமித்தமே இவர்கள் சந்தோஷமிழந்து ஜீவிக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல், சந்தோஷமாக மாற முயல்வது கூட அவர்களால் இயல்வதில்லை.... ஏனெனில்,*

*இவர்களை தேவனே எதிர்த்து நிற்கிறார்! இவ்வளவு கேடான இந்த பெருமையிலிருந்து, நாம் அனைவரும் ஜாக்கிரதை கொண்டு விழித்திடக்கடவோம்!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## அழகு சீர்குலைந்த மரண அவஸ்தையில், என் நேசரைக் கண்டேன்!

*பல்வேறு குடும்ப நிகழ்ச்சிகளுக்குப் பிறகு எங்கள் மாளிகைக்குத் திரும்பினோம். வழக்கம் போலவே என் கணவர் என்னை குறை சொல்லவும், முறுமுறுக்கவும் தொடங்கினார்! இந்த சூழ்நிலையில் என் இளைய மகளுக்கு கொடிய அம்மை நோய் வந்துவிட்டது. அவளிடமிருந்து என் மூத்த மகனுக்கும் பரவிவிட்டது. அழகுள்ள என் மகளின் முகம் அகோர கொப்பளங்களால் ஆட்கொண்டது. எனக்கு ஆவிக்குரிய ஆலோசகராய் இருக்கிற 'கிரங்கர்' அம்மையார் "உனக்கும் அம்மை நோய் பரவுவதற்கு முன்பாக நீ உன் அப்பா வீட்டிற்குச் செல்" என கூறினார். என்னையும் என் இரண்டாவது மகளையும் அழைத்துச் செல்ல என் தந்தை வந்துவிட்டார். ஆனால்* **என்னை கடும் பகையாய் வெறுத்த என் மாமியார்,** *எங்களை அனுப்ப மறுத்துவிட்டார். என் கணவரிடம் சென்று "நாமே ஒரு மருத்துவரை வைத்து பார்த்துக் கொள்ளலாம்" எனக் கூறி தடுத்துவிட்டார்கள். இந்த சூழ்நிலையைக் காணவந்த என் உறவினர்கள் அனைவரும் என் மாமியாரிடம் "தயவுசெய்து இவளை அவள் அப்பா வீட்டிற்கு அனுப்பி உங்கள் மருமகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்" என கெஞ்சினார்கள். ஆனால், இவ்வாறு கூறிய அனைவரிடமும் "இவள்தான், தன் அப்பா வீட்டிற்கு போக மறுத்து அடம் பிடிக்கிறாள்!" என எதிர்மாறாக கூறிவிட்டார்கள். அவ்வேளையில் என் மனதில் எந்த சஞ்சலமும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக "என் ஆண்டவரின் நித்திய பாதுகாப்பிற்கு என்னை அர்ப்பணித்து விட்டேன்!"*

ஒருவேளை, நான் என் மாமியாரை பலவந்தமாய் உதறி, என்னை பாதுகாத்திருக்க முடியும்! நானோ அவ்வாறு செய்யவில்லை..... என் மாமியாரின் அனுமதி இல்லாமல் நான் போகவிரும்பவில்லை. என் மாமியார் என்னை அனுப்ப மறுத்த செயல் "பரத்திலிருந்து வந்த கட்டளையைப் போல்" எண்ணி அமைதியானேன்!

*இதே அர்ப்பணத்தில், என்னை தேவனுடைய பலிபீடத்தில் வைத்து, சிறிது நேரத்தில் அந்த பலிபீடத்திற்கு என்னை முற்றிலும் தத்தம் செய்துவிட்டேன். என் மீது வைத்த எந்த பிடிப்பிலிருந்தும்*

என்னை விலக்கிக் கொண்டது போலவே, என் வசீகரமான இரண்டாவது **இளைய மகன் மீதுகொண்ட பிடிப்பிலிருந்தும் என் கரத்தை விலக்கி,** தேவனுக்கு முன்பாக என் கையை விரித்துவிட்டேன். என் மூத்த மகன் மீது என் மாமியாருக்கு கொஞ்சம் பிரியம் உண்டு. அவர்களுக்கு ஏனோ, மற்ற இளைய பிள்ளைகள் மீது விருப்பம் இருப்பதில்லை.

இவர்களின் சுயமான விருப்பு - வெறுப்புகளைக் கூட, தம்முடையவர்களுக்கு சாதகமாக தேவன் பயன்படுத்த முடியும் என்பதை நான் அறிந்திருந்தேன்.

இவ்வாறாக, என்னைச் சூழ இருந்தவர்களின் செயல் நியாயமற்றதாயும் துன்பம் விளைவிப்பதாயும் இருப்பதை காணும் சூழ்நிலையில், நானோ என் ஆவியில் உயரச் சென்று.... அநீதியான இவைகளும், தேவனுடைய இரக்கத்திற்கும் அவரது நீதிக்கும் ஏற்ற உபகரணங்களாய் இருப்பதைக் கண்ணுற்று வியந்தேன்! மேலும், தேவனுடைய நியாயத்தில் அவரது இரக்கம் நிறைந்திருப்பதையும் கண்டேன்.

வெகு சீக்கிரத்தில் அம்மை நோய் என்னை தாக்கத் தொடங்கியது! நான் என் கணவரிடம் "அம்மை நோயின் தாக்கத்தை என் வயிற்று வலியில் காண்கிறேன்" என கூறியபோது "நீயாகவே எதையும் கற்பனை செய்து கொள்ளக்கூடாது" என முற்றுபுள்ளி வைத்து விட்டார். இதுபோன்ற சூழ்நிலையை என் ஆவிக்குரிய ஆலோசகர் கிரங்கர் அம்மையாரிடம் கூறியபோது, அவர்கள் சற்று மனம் வருந்தினாலும் "உன்னை முற்றிலும் தேவனுடைய கரத்தில் ஒப்புவித்துவிடு" எனக் கூறி தைரியப்படுத்தினார்கள்!

நேரம் ஆக ஆக என் உடல் நடுங்கி, என் தலையும் வயிறும் அதிகமாய் வலிக்கத் தொடங்கியது. ஆனால் என் கணவரோ என் மாமியாரோ, எனக்கு வந்துவிட்ட வியாதியை சிறிதுகூட நம்பவில்லை. ஒருசில மணி நேரங்களுக்குப் பிறகுதான், **நான் பிழைக்க முடியாத அபாயத்தில் இருக்கிறேன்** என்பதை உணர்ந்தார்கள். என்னுடைய நுரையீரல் வீக்கமடைந்து, அம்மை கொப்பளங்கள் அகோரமாய் தோன்றத் தொடங்கியது! என் மாமியாருக்கு வைத்தியம் செய்யும் மருத்துவர் அன்று ஊரில் இல்லை. இந்நிலையில் எங்கள் இல்லத்திற்கு வந்த மற்றொரு வைத்தியர் "கொப்பளங்கள் உடனே பிதுக்கப்பட வேண்டும்" என கூறினார். ஆனால் என் மாமியார் உறுதியாக மறுத்துவிட்டார்.

என் கணவரோ, 'அம்மை நோய் தனக்கும் வந்துவிட கூடாது' என

*என் மாமியாரிடம் என்னை ஒப்படைத்துவிட்டு வேறொரு அறைக்குச் சென்று விட்டார். என் மாமியாரோ, அவர்களுடைய வீட்டு மருத்துவர் வரட்டும் என கூறி, பக்கத்து இடத்திற்குச் சென்ற அவரை அழைத்து வர வண்டியும் அனுப்ப மறுத்துவிட்டார். இந்நிலையில், நானோ மரண அவஸ்தையின் போராட்டத்திற்கு வந்துவிட்டேன். ஆகிலும் யாதொரு தீங்கும் முறுமுறுப்பும் என் வாயிலிருந்து வராதிருக்க தேவன் கிருபை செய்தார்.* **தேவனுடைய கரத்திலிருந்து மரணம் வந்தாலும் சரிதான்! ஜீவன் உண்டானாலும் சரிதான்!** *என அவரது கரத்தை காண்பதற்கு என் கண்களை ஏறெடுத்தேன். இந்த என் முழுமையான ஒப்புகொடுத்த நேரத்தில், என் இருதயத்திலோ புத்திக்கு எட்டாத தேவ சமாதானத்தை நான் ருசித்தேன்!*

தேவனும், என் மீது அளவில்லாத கிருபையை பொழிந்தபடியால் "என்னையும், என்னை வாதித்த வலிகளையும் முற்றிலும் மறந்துவிட்டேன்!" தன் கிருபையின் வேலி வைத்து என்னை காத்துக்கொண்ட கர்த்தரின் செயலை எண்ணி வியந்தேன்!

*இவ்வேளையில், எங்கள் ஊரிலுள்ள மிகத் திறமையான வைத்தியர் எங்கள் வியாதியை கேள்விப்பட்டு, வீட்டிற்கு வர தேவன் கிரியைச் செய்தார். அந்த மருத்துவரிடம், என் மரண நிலையை அங்கிருந்தவர்கள் எடுத்துக் கூறினார்கள். என்னை வாட்டி வதைத்த அம்மை நோய் என் முகத்திலும் என் மூக்கிலும் மிகப்பெரிய கொப்பளங்களாய் தோன்ற ஆரம்பித்தது. அந்த கொப்பளங்கள் மிகவும் கறுப்பான நிறத்தில் இருந்தன. என் மூக்கிலும் முகத்திலும் தோன்றிய கொப்பளங்கள்* **'அழுகிப்போன நோய்'** *என அந்த மருத்துவர் சந்தேகப்பட்டு, என் மூக்கு செத்து விழுந்து விடும் என்ற அபாயத்தை கூறினார். சிறிது நேரத்தில் என் இரு கண்களும் நெருப்பு நிறம் கொண்ட கொப்பளங்களாய் தகிக்கத் தொடங்கியது. அந்த மருத்துவர் என் மாமியாரின் அறைக்கு வேகமாக சென்று, "இந்த நிலையில் உங்கள் மருமகள் மரிப்பது பரிதாபமல்லவா? அவளது உடலிலுள்ள சலங்களை என்னால் முடிந்தவரை பிதுக்கி எடுக்கிறேன்!" என மன்றாடி கேட்டுக் கொண்டார். ஆனால் என் மாமியாரோ கோபமான வார்த்தைகளைப் பேசி, மருத்துவரை மனம் மடியச் செய்தார். அந்த மருத்துவர் கடினமான வார்த்தைகளால் என் மாமியாரைப் பேசிவிட்டு, எங்கள் மாளிகையை விட்டு வெளியேறினார். சிறிது நேரத்தில் திடீரென்று என்னிடத்தில் வந்து "நீ அனுமதித்தால் நான் உன் சலங்களை பிதுக்கி எடுத்து உன் ஜீவனை காப்பாற்ற ஆயத்தமாயிருக்கிறேன்" என வேண்டினார். நான் பேச முடியாத*

நிலையில், அவரது வேண்டுகோளுக்கு சம்மதம் தெரிவிக்கும் வகையில் என் கைகளை உயர்த்தினேன். மருத்துவர் சிறிதும் தாமதியாமல், என் வேதனையின் மத்தியில், கொப்பளங்கள் அனைத்தையும் ஆழமாய் பிதுக்கி இரத்தமும், சீழும் வெளிவரச் செய்தார். என் மாமியாரை மீறி இந்த செயல் நடைபெற்றபடியால், என்னையும் அந்த மருத்துவரையும் கோபமாய் திட்டினார்கள். எனக்கோ, அந்த அம்மை நோய் என்னைவிட்டு போனது போன்று உணர்ந்தேன்! அந்த மருத்துவர் என் மாமியாரைப் பார்த்து "உங்கள் மருமகள் பூரண குணமடைய இன்று மாலையும், இதே போன்று சீழ் பிதுக்கும் சிகிச்சை செய்ய வேண்டும்" என எவ்வளவோ மன்றாடி கேட்டும், என் மாமியாரோ தேவன் அனுப்பித் தந்த அந்த நல்ல மருத்துவரை விரட்டி அடித்தார்கள்.

இந்நிலையில், தேவனுடைய கரத்தில் என்னை முற்றிலும் அர்ப்பணித்து விட்ட நான் 'அந்த மருத்துவர் இருக்கட்டும்' என முரண்செய்யாத நிலையில் மௌனமாகி விட்டேன்!

இச்சமயத்தில் நான் அறிந்து உணர்ந்த பாடம் என்னவென்றால், நம்மை யாதொரு நிலையிலும் பாதுகாக்க முயற்சிக்காமல் முற்றிலுமாய் தேவனுடைய கரத்தில் ஒப்புக்கொடுப்பதே நலம்! தோற்றத்தின்படி அவர் நம்மைவிட்டு விலகியது போல் தோன்றினாலும், நம்முடைய விசுவாசமோ நிருபிக்கப்பட்டு, திடன் கொள்ளவும் முடியும்! எல்லாவற்றிற்கும் மேலாய், இதுபோன்ற கொடிய சமயங்களில் "தேவன் என்னைவிட்டு நீங்காதவராய் இருந்தார்!" **எது எனக்கு பிரதான தேவையோ "அந்த தேவ பிரசன்னத்தை" இந்த கொடிய துன்ப நேரத்தில் கண்ணாரக் கண்டு களித்தேன்!** வேத வாக்கியமும் அவ்வாறே "என்னை மரணபள்ளத்தாக்கில் கொண்டு வந்தவரும் அவர்தான்! என்னை மரித்த நிலையிலிருந்து உயிர்தெழ செய்தவரும் அவர்தான்!" என்பதையும் மனதார ருசிபார்த்தேன்.

அடுத்த இரண்டு முதல் மூன்று வாரங்களில், என் உடல் முழுவதும் குஷ்டரோகத்தால் அழுகியது போன்ற தோற்றமளித்தது. என்னைக் கண்ட அத்தனை பேரும், கண்ணீர் வடித்து, எங்கள் வாழ்க்கையில் "இப்படி ஒரு அவலக் காட்சியை நாங்கள் கண்டதே இல்லை" என பரிதபித்தார்கள். ஆகிலும், என்னுடைய ஆத்துமாவிற்கோ, இந்த என் நிலைமை 'உள்ளான திருப்தியையே' எனக்குத் தந்தது! என்னை காலமெல்லாம் **அடிமைதனப்படுத்திய என் அழகு சீர் குலைந்தது!** இந்த விடுதலை, எனக்கு சொல்லொண்ணா திருப்தியையும், தேவனுடைய நெருங்கிய ஐக்கியத்தையும் ஏற்படுத்தியது. "இப்போதிருக்கும் என்

*அழகற்ற நிலை, இந்த முழு உலகத்திலும் அதிக அழகுள்ள இளவரசராயிருக்கும் என் ஆண்டவராகிய நேசருக்குப் பிரியமாய் இருந்தால், அதுவே எனக்குப் போதும்!" என என் உள்ளத்தில் நிறைவான அமைதி கண்டேன்!*

*– மேடம் குயான்*

---

## வேதத்தின் 'ஆதிநிலை' புரட்டுவோரை, புறக்கணியுங்கள்!

*ஒரு புதிய வசனத்தைக் காண்பித்து, அதற்கு இணையாக அல்லது அந்த வசனத்தை ஆமோதிக்கும் வேறொரு வசனம் சுட்டி காட்டப் படாதிருந்தால், அதை நாம் புறக்கணித்துவிட வேண்டும். கடந்த 50ஆண்டுகளில் "புதிய சத்தியங்களென" முளைத்து, இவைகள் 'கடைசிக் கால சத்தியங்கள்' எனப் பெயர் சூட்டி, 'இப்போதுதான் தேவன் அதை வெளிப்படுத்தியிருக்கிறார்!' எனக் கூறி, திரளான கிறிஸ்தவர்களை வஞ்சகத்திற்கு வசப்படுத்தியுள்ளார்கள். ஆனால் வேதாகமமோ, "ஓர் புதிய வெளிச்சம் கிடைக்கும்! கடைசி நாட்களில் ஆவிக்குரிய வெளிப்பாடு தோன்றும்!" என்று போதிக்கவேயில்லை. இதற்கு நேர்மாறாக "ஆதி நிலை ஏகுவோம்!" என்றே அறைகூவல் விடுக்கிறது. ஆதி அப்போஸ்தலரை விட நாங்கள் ஞானவான்கள் என கூறுபவர்களையும்.... ஆதிசபை பரிசுத்தவான்களையும், இரத்த சாட்சியாய் மரித்தவர்களையும் விட, நாங்கள் பரிசுத்தவான்கள் எனக் கூறுபவர்களையும் குறித்து எச்சரிக்கையாயிருக்கக்கடவோம்.*

> **எழுத்தைவிட, அதற்குப் பின் இருக்கும் ஆவியே உயர்ந்தது! எனக்கூறும் உயர்ந்த வாசகத்தை, சிலர் தவறாய் பயன்படுத்தி, தங்களுக்கு ஏற்றாற்போல் சத்தியத்தை புரட்டிக் கொள்கிறார்கள். ஆனால் எழுத்திற்கும் சத்தியத்திற்கும் இணைபிரியா பந்தம் உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.**

*ஒன்று மற்றொன்றை சேவிப்பதாகவே உள்ளது. அது, தேன் கூட்டிற்கும் தேனிற்கும் உள்ள உறவைப் போலாகும். தேன் கூட்டிலிருந்து கூட தேனைப் பிரித்துவிடலாம்.... ஆனால், சத்திய ஆவி, ஒருபோதும் 'பரிசுத்த வேதாகம எழுத்தை' புறக்கணித்து விட்டு, தானாய் செயல்படுவதில்லை. ஆகவேதான், பரிசுத்தாவியின் இணைபிரியா ஐக்கியத்தின் வளர்ச்சி, வேதவாக்கியங்கள் மேல் கொண்ட சிநேகத்தின் வளர்ச்சியாகவும் இருந்திட வேண்டும்!*

*மேலும், ஊழிய வளர்ச்சியில் செல்வதாகக் கூறிக்கொண்டு, தன்னோடு சேர்ந்துள்ள உடன் கிறிஸ்தவர்களைப் புறக்கணிப்பதும், பகைப்பதும், சத்தியத்திற்குப் பெரும் பிழையாகும்! அவர்கள் ஜீவியத்திலும், அவர்கள் ஊழியத்திலும் வளர்ச்சி அடைந்திருக்கலாம்*

*.... ஆனால், தன் உடன் சகோதரனைப் பகைத்து அவனை விட்டு விலகுவது, அபாயகரமானதாகும்! இந்த சகோதரனுடைய புதிய ஆவிக்குரிய தோற்றம், சிநேகத்தை வளர்க்காமல், அதை வெகுவாய் குறைத்தது ஏன்? ஆகவே, தன் உடன் கிறிஸ்தவர்களோடு, இன்னும் ஆழமான ஐக்கியம் கொள்ளாமல், அவர்களை குற்றம் சாட்டுபவர்களின், "புதிய ஆவிக்குரிய வளர்ச்சியை" புறக்கணிப்பதே வேதத்தின்படி பாதுகாப்பானதாகும். ஏனெனில் 1யோவான். 3:18,19 கூறுகிறப்படி "இவர்கள் சத்தியத்திற்குரியவர்கள் அல்ல!" என அறிந்திடக்கடவோம். எந்த ஒரு உபதேசமும், பரிசுத்தத்தை அதிக கவர்ச்சியான அழகுள்ளதாயும், பாவத்தை எந்த ரூபத்திலும் சகித்துக் கொள்ள மறுப்பதாயும் இருக்க வேண்டும்! அப்போது மாத்திரமே அந்த உபதேசங்கள், கறையேதும் இல்லாத உண்மையானவைகள் என நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.*

**ஒரு காலத்தில் தீர்க்கதரிசிகளாய் இருந்தவர்கள், பின் காலத்தில் கள்ளத் தீர்க்கதரிசிகளாய் மாறியது ஏன்? அன்று பரிசுத்தத்தை அழகுறக் காட்டியவர்கள், பாவத்தை சிறிதேனும் சகித்துக் கொள்ளாதவர்கள்..... இப்போது தாங்களும் வஞ்சிக்கப்பட்டு, தெரிந்துக் கொண்டவர்களையும் வஞ்சித்து பிரசங்கிப்பதால் அவர்கள் 'கள்ளத்தீர்க்கதரிசிகளாய்' மாறிப்போனார்கள்! (மத்தேயு 24 : 24).**

*சத்தியத்திற்கு விரோதமான பிழையான உபதேசங்களுக்கு விலகி வாழ, நம் ஆத்தும வளர்ச்சிக்குரிய விசுவாசத்தோடு சேர்த்து 'ஆரோக்கியமான வசனமும்' வேண்டும்!*

– *A.W.* டோசர்

---

## ஊழிய சீரழிவிற்கு துக்கம் அடையாமல், எழுப்புதல் இல்லை!

*இன்று சீர்கெட்டு கிடக்கும் ஊழியங்களைப் பாருங்கள், அனைத்தும் வியாபார சந்தையைப் போலவே இருக்கிறது. ஏழை எளியவர்களின் காணிக்கைகள் "சினிமா நட்சத்திரங்களைப் போன்று தோற்றமளிக்கும்" சுவிசேஷகர்களின் ஆடம்பரத்திற்கு கொட்டப் படுகிறது! தங்களுக்கு முன்பாக ஒரு ஜனக்கூட்டம்! ஆர்ப்பரிக்கும் ஆரவாரங்கள்! அந்த ஊர் அரசியல்வாதியின் அங்கீகாரம்! ஆகிய அனைத்தும் விண்ணை பிளக்கச் செய்கிறது. தங்கள் ஊழியத்திற்கு தாங்களே மாபெரும் விளம்பரம் செய்து, மார்தட்டிக் கொள்கிறார்கள். அப்பாவி ஏழை ஜனங்கள், தங்கள் வறுமையோடிய ஏழை கன்னத்தில் கை வைத்து "இவரும் பெரிய ஊழியக்காரராய் இருப்பார் போலும்!" என மதி மயங்கி பார்க்கின்றனர்!*

*உல்லாச ஆற்றுப் படுக்கையில் தங்கள் வீடுகளைக்*

கட்டிக்கொண்டு! வங்கியில் ஏராளமான பணத்தை அடுக்கிக் கொண்டு! "இன்னமும் பணம் தாருங்கள்!" என வெட்கம் இல்லாமல் தங்களுக்காக பணத்தை குவிக்கும் இந்த 'பிரசங்கி பிச்சைக்காரர்கள்' வழிப்பறி கொள்ளையர்களைவிட அநாகரீக மோசத்தில் ஈடுபடு கிறார்கள். **இதுபோன்றவர்களுக்கு தேவன் அபிஷேகத்தை தருவாரா? அல்லது தமது ஊழியத்தை ஒப்புக் கொடுப்பாரா?** இந்த பிரசங்கிகள், தங்கள் அழகு சினிமா நட்சத்திர உடைகளை ஒருநாளைக்கு ஒருமுறை அல்ல, இரண்டு அல்லது மூன்று முறை மாற்றிக் கொள்ளும் நடிக கவர்ச்சியாளர்கள். இவர்கள் மாட்டு தொழுவத்தில் பிறந்த இயேசுவைதான் பிரசங்கிக்கிறார்கள்..... ஆனால் இவர்களோ நட்சத்திர ஹோட்டல்களுக்கு சொகுசு நாடி செல்கிறார்கள். தன் பிரசங்கத்திற்கு இன்னொருவர் கையிலிருந்த வெள்ளிக்காசை உதாரணமாய் காட்டிய இயேசு எங்கே? தங்கள் இச்சையான வாழ்வை பூர்த்திசெய்ய நாடி, ஜனங்களின் பணத்தை அபகரிக்க, காணிக்கை கரம் நீட்டும் 'கிறிஸ்துவை இழந்த' இந்த பிரசங்கிகள் எங்கே? தன் பிதாவை தேடி உபவாசிக்கச் சென்ற குருநாதர் எங்கே.... உல்லாசத்தை நாடி 'கிருபை நாட்களில் உபவாசம் இல்லை' என துணிகரமாய் மறுக்கும் இந்த பிரசங்கிகள் எங்கே?

*சீக்கிரத்தில் விடிய போகும் நியாயத்தீர்ப்பில், இந்த நீச பிரசங்கிகள், பட்சிக்கிற அக்கினியாய் எழும்பும் நியாயாதிபதிக்கு முன்பாக நடுநடுங்கி நிற்பார்கள் என்பது அதி நிச்சயம்!*

அனல் கொண்ட எழுப்புதலுக்கு பதிலாக, சினிமா பாணியில் இயேசுவின் சுவிசேஷ தரம் கெட்டு சீரழிகிறது. அன்று ஒலித்த, உள்ளத்தை தொடும் 'பக்தி பரவசமான பாடலுக்கு பதிலாக' சினிமா ராகத்தில், உணர்ச்சியை தூண்டி ஆடிப்பாடவைக்கும் பாடல்களும் அவர்களது கேசட்டுகளும், ஆலயத்தின் தூய்மை பீடத்தில் குவிந்து, மக்களைத் தீட்டுப்படுத்திவிட்டன! இவர்களின் இசைக்கருவியில் **'இயேசு சிந்திய இரத்தத்தின் தியாகம்'** இழையோடவில்லை. இசையின் கீதத்தில் பரிசுத்த ஆவியானவர் உள்ளத்தை ஊடுருவும் அன்றைய அற்புதங்கள், இன்றைய நாடக குழு போன்ற சபையின் பாடகர் இன்னிசையில் காணப்படவும் இல்லை!

இதைக்குறித்து **அக்கறை இல்லாமல்** 'தேவனுடைய வீடு பாழாய் கிடக்கிறதே' என்ற **ஆத்திரமில்லாமல்....** சபையில் தேவன் எழுந்தருள்வார்! எழுப்புதல் வந்துவிட்டது! என ஆர்ப்பரித்து, ஜனங்களை வஞ்சிப்பதுதான் இன்றைய கொடுமை!

– *லியோனார்டு ரேவன்ஹில்*

## உத்தம ஊழியத்தை கர்த்தரே ஆதரிப்பார்!

*ஒரு தனி விசுவாசி, தனக்கு வேண்டிய காரியங்களுக்காக கர்த்தரை நம்பிப் பிழைப்பதுபோல, நமது சபையின் காரியங்களையும் ஆண்டவருக்கு ஒப்புவித்து அவரையே சார்ந்து பிழைக்க வேண்டும்! நம் ஸ்தல சபையில்* **'தேவ இராஜ்ஜியத்தையே நாம் பிரதானமாய் தேடும்போது'** *ஆண்டவர் உங்கள் சபையின் அனைத்து ஊழியங்களையும், தேவைகளையும் ஆதரித்து காப்பாற்றாதிருப்பது எப்படி? சபையில் ஆவிக்குரிய ஆசீர்வாதம் பெற்ற தேவ மக்கள் தங்களால்* **இயன்றதை** *உற்சாகமாய் கொடுப்பதற்கு வாய்ப்புண்டு! தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தவர்கள் தங்கள் பணத்தைக் கொடுப்பது பெரிய காரியமல்ல! ஆராதனைகளும் பிரசங்கங்களும் மற்றும் சபையிலிருந்து ஈடேற்றும் அனைத்து பணிகளும் தேவ ஊழியமாய் இருப்பது போல, அவ்வூழியங்கள் நடந்தேறும்படி ஊழிய காணிக்கை தருவதும் தேவ ஊழியம் என்பதை உண்மையான இயேசுவின் சீஷர்கள் அறிவார்கள்! (2கொரி.9:12). ஆனால், உற்சாகமாகக் கொடுப்பவர்களுக்கும் கொடுக்க முடியாமல் இருப்பவர்களுக்கும் நமது ஊழிய பணிவிடையில் வித்தியாசமிருக்கக் கூடாது. பணத்தை அல்ல, அவர்களுடைய இரட்சிப்பையே நாம் பிரதானமாகத் தேட வேண்டும்!*

> அப்படியே இஷ்டம் போல் "மனப்பூர்வமாய் கொடுக்கட்டும்" என விட்டு விட்டால் காணிக்கை குறைந்து போகாதா? ஒருவேளை குறையலாம்.... மனப்பூர்வமாய் ஜனங்கள் கொடுக்க வேண்டும், அவ்வளவுதான்! ஆனால், கர்த்தருடைய ஊழிய வேலைக்கு அதனால் பாதகம் ஏற்படுவதில்லை.

*காணிக்கை சொற்பமாயுள்ள சபையில் தேவ ஆசீர்வாதம் இல்லையென்றோ, ஏராளமான பணத்தைச் சேர்த்து வைத்திருக்கும் சபையில் ஆசீர்வாதம் பெருகி விட்டதென்றோ யார் சொல்ல கூடும்? ஏழுமலை திருப்பதி ஆலயத்தின் வருமானத்துக்கு நிகர் உண்டா? அதிக காணிக்கை வரும் ஓர் சபையின் போதகரைப் பார்த்து: "உங்களுக்கு பண குறைவேயில்லையே" என மற்றொரு போதகர் கேட்டார்! அதற்கு அவர்: பணக்குறைவும் இல்லை, பிசாசின் கோஷ்டத்துக்கு அளவும் இல்லை! சபை மக்களிடையே அன்போ, ஐக்கியமோ கிடையாது. எப்போபார்த்தாலும் போராட்டமும் பிரிவினையும்தான்! என்று பெருமூச்சு விட்டார்.*

*பணத்தைக்கொண்டு சபைகளின் நிலைமையை மதிப்பது*

*சரியல்ல.* "**முதலில் பணம் அப்புறம் ஊழியம்**" *என்பது இன்றைய மிஷன் ஊழியத்தின் ஏற்பாடு. சபையின் மகிமை ஆவிக்குரிய ஐசுவரியமேயன்றி பண பெருக்கம் அல்ல! "தரித்திரர் என்று எண்ணப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்கக் கூடிய" தேவ மக்களும், சபைகளும் உண்டு! "வெள்ளியும் பொன்னும் எங்களிடத்தில் இல்லை" என்று சொன்ன ஏழைகள், பிறவி சப்பாணியை நடக்கச் செய்தார்கள். ஒருவனுடைய உண்மையான குணப்படுதல், அற்புதத்திலும் மேலானதல்லவா? உலகம் முழுவதும் அதற்கு ஈடாகாதே! ஆண்டவர் சொன்ன "பெரிய கிரியைகள்" அதுதான். ஒரு சபையிலுள்ள ஏராளமான பணத்தைக் கண்டு தேவ தூதர்கள் சந்தோஷப்படாமல், அந்த சபையில் ஒரு பாவி மனந்திரும்புவதைக் கண்டு, மிகுந்த சந்தோஷப்படுகிறார்கள்!*

தேவ இராஜ்ஜியத்தின் வேலையைப்பற்றி எவ்வளவோ தாராளமாய் ஊக்கமாய் பேசின ஆண்டவர், அதற்காக பணம் சேகரிப்பதைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை!

*மேலும், பொருளைப்பற்றி அவர் பேசும்படி நேரிட்ட சமயங்களிலெல்லாம், உலகப்பொருளைக் குறித்த அவருடைய கண்டிப்பான எச்சரிப்பைத்தான் கேட்கிறோம்! இப்படி சொல்வதினாலே பணம் வேண்டியதேயில்லை என்பது நமது கருத்தல்ல. பணத் தேவைகளை கர்த்தர் அறிந்து, அதை 'எந்த வழியிலும்' பூர்த்தி செய்வார்! சபையில், தெய்வ பயத்தில் நிலைத்திருக்கும் ஏழை பரிசுத்தவான்களின் குறைவான காணிக்கையை ஆசீர்வதித்து சபையின் அனைத்து தேவைகளையும் சந்திப்பார்!* **இருப்பினும் ஒரு உத்தம தேவ சபை, பணத்திற்குப் பின்பாகவோ பணக்காரர்களுக்குப் பின்பாகவோ ஒருக்காலும் போய்விடக்கூடாது!**

*ஆம், பாவிகளை இரட்சிக்கும் வல்லமை பணத்துக்கு இல்லை. தேவ ஈவாகிய பரிசுத்த ஆவியைப் பணத்தினால் வாங்க நினைத்த சீமோனை, அன்று பேதுரு பலமாய் கண்டித்தார். ஆவிக்குரிய ஊழியரால் ஆவிக்குரிய வேலை நடக்கும் போது, ஆண்டவர் அவர்களை ஆதரிக்காமல் விடார்! "வேலையாள் தன் கூலிக்கு பாத்திரனாய் இருக்கிறான்" என்றும் "சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு, சுவிசேஷத்தினாலே பிழைப்புண்டாக வேண்டும்" என்றும் கட்டளையிட்ட கர்த்தர், தமது உத்தம ஊழியரையும் அவர்கள் ஊழியத்தையும் இன்றும் என்றும் 'பொருள் விஷயத்தில்' ஒருக்காலும் கைவிடவேமாட்டார்!*

*– பரமானந்தம் ஐயர்*

## 'உங்கள் பகையே' தீமை! அதை ஜெயிப்பதே இயேசுவின் வலிமை!!

*அன்பிற்கு நேர் எதிரான "பகை" வேறு எந்த துன்பத்தைப் பார்க்கிலும் கொடியதாகும்! 'எஜமானாகிய' தன்னைப் பகைத்த உலகம் "உங்களையும் பகைக்கும்" என்றே தன் சீஷர்களுக்கு இயேசு கூறினார் (யோவான்.15:18-20). தான் எருசலேமுக்குச் சென்றதும்.... காட்டிக் கொடுக்கப்பட்டு, நிந்திக்கப்பட்டு, கொலை செய்யப் படுவதை இயேசு முன்னறிந்தார்! (மத்தேயு.20:18). அவ்வித பகை நிறைந்த சூழ்நிலையை ஜெயித்திட,* **எதிர்ப்பான பகையோடு 'குதிரையில் அமர்ந்து' சந்திக்காமல்.... சாந்தமுள்ளவராய் 'கழுதைக் குட்டியின் மீது பயணம் செய்தே' ஜெயம் பெற்றார்!**

*இயேசு வென்றது, ரோம போர்ச்சேவகர்களோ, பிரதான ஆசாரியர்களோ, நன்மைக்குத் தீமை செய்த எருசலேம்வாசிகளோ, கூடவே இருந்து காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்தோ அல்ல.... அவரோ, பகையை வென்றார்! தீமையை வென்றார்!*

*இந்த உலகமோ "தீமை செய்தவர்களை" வென்றிட வகை தேடுகிறது! ஆகவேதான் 'குதிரையின் வலிமையை' நாடுகிறார்கள்! நாமோ, நம் குருவைப்போல் "தீமையை வெல்லும்படியே" அழைக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர்.12:21).*

*அந்த தீமை, தீமை செய்தவர்களின் தீமையும் அல்ல.... நம்மிலே உருவாகும் "பகையே" தீமையாகும்! உங்களை, தீமை செய்தவர்கள் வென்றிட இயலாது! "உங்கள் தீமையே" உங்களை வென்றுவிடும்!! தன்னை விரோதித்தவர்களை, முகாந்திரமில்லாமல் பகைத்தவர்களை இயேசு அன்புகூர்ந்து மன்னித்த செயல், "தீமையை நன்மையினால் வென்றிட்ட" செயலாகும்!!*

'இயேசுவை சிலுவையில் கொன்றார்கள்' என்பது ஜெயம் அல்ல! அவ்வாறு, நான் பிறரால் நசுக்கப்பட்டு ஒடுங்கிப்போனேன் என்பது நற்செய்தி அல்ல!! உண்மையாதெனில் பகையை, அதுவும் "தம்முடைய மாம்சத்திலிருந்து எழுந்த பகையை" இயேசு சிலுவையில் கொன்றார்! என்பதே நற்செய்தியாகும் (எபே.2:14-16).

*பகைத்தவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து விட்டார்கள் என்பது இவ்வுலக இராஜ்ஜிய மக்களுக்கு வெளித்தோற்றமான வெற்றி! ஆனால் "விரோதத்தை" இயேசு, சிலுவையின் மேல் ஆணியடித்து வெற்றி சிறந்தார்!! என்பதே பரலோக கெம்பீர வெற்றியாகும்!! (கொலோ.2:14,15). இயேசு வெற்றி சிறந்தார், இப்போது கிறிஸ்துவைப்போல் நாமும் வெற்றி சிறந்திட வேண்டுமே!?*

– *T.ரத்தினகுமார்*



# பாலிகார்ப்,
## தீயில் ஜொலித்த சிமிர்னா சபை மூப்பர்!
(69–156AD) சிமிர்னா – துருக்கி

ஆண்டவர் போற்றிய சிமிர்னா சபையை நடத்தும் மூப்பராய் இருந்தவர் 'பாலிகார்ப்'. அன்று ரோமானிய பெருந்திடலில், ஒரு வேடிக்கை பொருளைபோல் கைகள் கட்டப்பட்டு நின்று கொண்டிருந்த சிமிர்னா சபையின் மூப்பனுக்கு திடீரென்று வானத்திலிருந்து சத்தம் உண்டாகி "பாலிகார்ப், திடமனதாயிரு! இங்குள்ள மனிதர்களுக்கு சிறிதும் அஞ்சாதே!" என சத்தம் உண்டாகியது.

ரோம் அதிபதி உள்ளே வந்து "ரோமாபுரி இராயருக்கு அபயமிடு! கிறிஸ்துவை மறுதலித்து விடு! நான் உடனே உன்னை விடுதலை ஆக்குவேன்!" என கூறினான். அதற்கு பாலிகார்ப் "66 வருடங்கள் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்து வருகிறேன். என் இராஜாவாகிய இயேசுவை தூஷிப்பது என்னால் முடியவே முடியாது!" என எதிரொலிக்கப் பேசினார். அதற்கு அந்த அதிபதி "பசி வெறி கொண்ட மிருகங்கள் தயாராயிருக்கிறது, நீ உன் மனதை மாற்றாவிட்டால் அவைகளுக்கு இரையாவாய்!" என கோபத்துடன் கூறினான். அதற்கு பாலிகார்ப் 'மிருகங்கள் வரட்டும்..... என்னுடைய தீர்மானமே திடமானது' என உறுதியாய் கூறினார். "மிருகங்களுக்கு நீ அஞ்சவில்லை என்றால், நெருப்பிற்கு நீ சாம்பலாவாய்!" என வெறிகொண்டார் ரோம் அதிபர். அதற்கு பாலிகார்ப் "நீங்கள் கூறும் நெருப்பு, ஒரு மணி நேரத்தில் அவிந்து போகும். ஆனால் அவபக்தியோர் மீது வரப்போகும் தேவனுடைய நித்திய நியாயத்தீர்ப்பின் நெருப்பை அறியாதிருக்கும் உங்கள் அறியாமைக்காக வருந்துகிறேன். ஏன் தாமதிக்கிறீர்கள், கொடிய மிருகமா? அல்லது நெருப்பா? எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளுங்கள்.... ஆனால் எதுவும் நான் கிறிஸ்துவின் மீதுகொண்ட விசுவாசத்தை மறுதலிக்கச் செய்ய முடியாது என்பதை அறியுங்கள்" என கர்ஜனைப் புரிந்தார்!

கோபக்கனலான அதிபதி, பாலிகார்ப்பை கம்பத்தில் அறைந்து தீயிலிட உத்திரவிட்டார்! அதற்கு பாலிகார்ப் "ஏன் கம்பத்தில் அறைய வேண்டும், கம்பத்தின் நடுவில் நிற்க வைத்து கொளுத்துங்கள்! நான் இருந்த இடத்திலிருந்தே எரிவேன். கண்டிப்பாய் வெளியில் ஓட மாட்டேன்" என கூற, கம்பத்தில் எரிக்க ஆயத்தமாயினார். பாலிகார்ப் உரத்த சத்தமாய் "ஓ பிதாவே, மற்ற இரத்த சாட்சிகளோடு எனக்கும் ஒரு பங்கை தந்ததற்காக உமக்கு நன்றி!" என ஜெபித்து முடிந்ததும், தீ ஜுவாலை எரியத் தொடங்கியது. எரிந்து முடிந்த தீயின் நடுவில் பாலிகார்ப் ஜொலிக்கும் தங்கத்தைப்போல் நின்று கொண்டிருந்தார்.... அந்த கருகிய இடத்திலிருந்து, அவரிடமிருந்து புறப்பட்ட நறுமணம் அரங்கத்தை நிரப்பியது. தீ அவரை தாக்கவில்லை என்பதை அறிந்த அதிபர், கொடிய கூர் வாழ் கொண்டு அவரை குத்திவிட கட்டளையிட்டார். அவ்வாறு குத்திய உடன், அவரிடமிருந்து புறப்பட்டு வந்த இரத்த வெள்ளம், பாலிகார்ப்பை சுற்றி இருந்த நெருப்பை அணைத்து விட்டது! அன்று ஏழு சபைகளுக்கு சிமிர்னா சபை செய்தியை அனுப்பிய ஆண்டவர், இதை வாசிக்கின்ற நமக்கும் அருளுகிறார்:

"நீ மரணபரிந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்"(வெளி.2:10).

*- கர்த்தரின் தீபங்கள்*

## ‘இச்சையின் இரைமூலம்’ நம்மை இரையாக்க முயலும் சாத்தான்!

சில ஆண்டு காலங்களுக்கு முன்னர், சென்னையிலுள்ள வண்டலூர் மிருகக்காட்சி சாலையை நான் காணச் சென்றிருந்தேன். மிருகங்களையும், பறவைகளையும் நான் பார்த்து முடித்த பின், புலிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு வந்தேன். அது ஒரு சாயங்காலநேரம். என்னுடன் வேறு எவரும் அந்தப் புலியைப்பார்க்க அந்த நேரம் வரவில்லை. நான் அதைப் பார்த்த போது, அது படுத்திருந்தது. அது தனக்கு கொடுக்கப்பட்ட அந்த நாளின் இறைச்சியை சாப்பிட்டுவிட்டு, ஒரு பகுதியை அப்படியே சாப்பிடாமல் தனக்கு முன்பாக சற்று தூரத்தில் வைத்திருந்தது. நான் அதைப்பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒரு பெரிய கீரிப்பிள்ளை எங்கிருந்தோ புலிக்கூட்டுக்குள் ஓடிவந்து புலிக்கு முன்பாக கிடந்த இறைச்சியை தின்ன ஆரம்பித்தது. அதைக்கண்ட புலியானது கோபத்துடன் உறுமுவதைப் பார்த்தேன். புலி உறுமலைக் கேட்டதும் கீரிப்பிள்ளை விரைவாக வெளியே ஓடிவிட்டு, சற்று நேரம் கடந்த பின்னர் திரும்பவும் வந்து அந்த இறைச்சியை உண்ண ஆரம்பித்தது! கீரி உண்பதைக் கண்ட புலி திரும்பவும் உறுமல் கொடுத்தது. உறுமல் சத்தம் கேட்டதும் கீரி மீண்டும் ஓட்டம் பிடித்தது. இப்படியாக அவைகள் ஒன்றுக்கொன்று கண்ணாம் மூச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தன.

அந்தக் காட்சியை நான் மறக்கவே இல்லை. வருடங்கள் சில ஓடிய பின்னர், ஒரு நாள் கர்த்தர் அந்த காட்சியைக் கொண்டு ஒரு காரியத்தை எனக்கு விளக்கினார். நான் இருந்த ஓர் இக்கட்டான சோதனை நெருக்கத்தில், கர்த்தர் தந்த அந்த விளக்கம் எனக்கு பேருதவியாய் இருந்தது! எனக்கு வெளிப்படுத்திய காரியம் இதுதான்:

‘‘மகனே, அந்த கீரிப்பிள்ளை யாருக்காக அந்த இறைச்சியை சாப்பிட்டு வருகின்றது என தெரியுமா? அந்தப் புலிக்காகவேதான்! அது புலியினுடைய ஆகாரத்தை தினமும் உண்டு, கொழுத்து, பின்பு அந்த புலிக்கே இரையாகும்படி வாழ்ந்து வருகின்றது. எப்படியும் ஒரு நாள், அந்தப் புலி சடுதியாக கீரியின் மேல் பாய்ந்து, அதை தனக்கு இரையாக்கிக் கொள்ளும். அதற்கு சந்தேகமே இல்லை!’’ என கூறினார்.

அப்படித்தான் சத்துருவாகிய பிசாசும் தனக்கு முன்பாக மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை போன்ற மாய உலக ஆசைகளைப் போட்டு.... அதை அனுபவித்து ஆனந்திக்க வரும் மாந்தரை கொஞ்ச காலம் அப்படியே அனுபவிக்க விட்டுவிட்டு.... ஒரு நாளில் அவர்களை சடுதியாக பற்றிப்பிடித்து, பீறிப்போட்டு, தனக்கு இரையாக்கிக்கொள்கின்றான்! ஓ வாலிபனே, நீ வாழும் பாவ வாழ்க்கை, முடிவில் உன்னை சாத்தானுடைய வாய்க்கு இரையாக்கிவிடும் என்பதை அறிந்து, இன்றே மனந்திரும்புவாயாக! உன்னை நோக்கி கரம் விரித்து நிற்கும் இரட்சகர் ஒருவரே, தன் உயிர் காத்து உன்னை இரட்சிக்கும் நல்ல மேய்ப்பன்! *- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.